DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure.)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TIRUMANGALAM

| | | |
|---|---|---|
| Calender | | |
| Miscellaneous | Case No | CC 108/18 |
| Priliminary Register | | |
| Sessions | | |
| | Prosecution | PW 5 |
| Deposition of witness for | Defence | |
| | Court | |
| Name | | Dhamodharan |
| Father's Name | | |
| Village | | |
| Taluk | | |
| Caste | | |
| Calling | | |
| Religion | | |
| Age | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 20

01.04.2019 முதல் விசாரணை:

நான் கப்பலூர் காந்திநகரில் குடியிருந்து வருகிறேன். நான் லேத் நடத்தி வருகிறேன். 04.05.2018 ம் தேதி முத்துக்கருப்பன் என்பவருடைய இரு சக்கர வாகனம் காணாமல் போய் விட்டதாகவும் அது தொடர்பாக அன்றைய தேுதி 9.35 மணியளவில் போலிசார் சம்பவ இடமான கோவில் அருகில் போலிசார் விசாரித்து படம் வரைந்தார்கள். அதற்கு சாட்சியாக நானும் என்னுடன் நாகராஜ் என்பவரும் கையெழுத்து செய்தோம். பார்வை மகஜரில் உள்ள 2 வது கையெழுத்து என்னுடையதுதான். பார்வை மகஜரில் உள்ள கையெழுத்து அ.சா,ஆ5. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

குறுக்கு விசாரணை:

நான் கப்பலூர் காலனியில் பிளாட் எண். 105 ல் லேத் வைத்துள்ளேன்.

முத:துக்கருப்பன் எனக்கு 7, 8 வருடங்களாக நல்ல பழக்கம் என்றால் சாதான். வெற்றுத் தாளில் கையெழுத்து செய்தேன் என்றால் சரியல்ல.எழுதிய பேப்பரில் தான் நான் கையெழுத்து செய்தேன். நான் வரைந்ததை பார்த்து தான் கையெழுதுது செய்தேன். வரைபடததில் உள்ள விபரங்கள் எனக்குதெரியும். வரைபடத்தில் 3 கட்டிடங்கள் இருப்பதாக குறிப்பிடப்பட்டுள்ளது. வரைபடத்தில் மின்சார போஸ்ட் மேற்குப் பக்கம் அமைந்துள்ளது. வரைபடததில் ரோட்டிற்கு பின்புறம் மரம் உள்ளது. திசை எனக்கு சரியாக நினைவில்லை. வரைபடத்தினை நான் பார்க்கவில்லை என்றும் வெள்ளைத்தாளில் கையெழுத்து செய்தேன் என்றும் காவல் துறையினா் கேட்டதால் பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. வரைபடத்தில் 8 கட்டிடங்கள் உள்ளது என்றும் 3 கட்டடிடங்கள் மட்டும் உள்ளதாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.